3584

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு சா.சங்கர், எம்.ஏ.,

ந.க.எண்.ப2/1206/2019 (வளர்ச்சி)

நாள்: 09.12.2020

பொருள்: "பணியமைப்பு"- புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- ஊராட்சி செயலர்களுக்கு 20% சதவித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2018-19ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பட்டியலின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது- பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து உததரவிடல்.

பார்வை:
1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் ந.க.3814/சிடி-அ1/2018 நாள்: 03.09.2018.
2.புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.1206/ 2019/ப2(வளர்ச்சி) நாள்: 08.03.2019.
3.தொடர்புடைய அலுவலகங்களிலிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள்.

-0-

உத்தரவு:-

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், ஊராட்சி செயலர்களுக்கான 20% சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2018-19ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலின்படி இளநிலை உதவியாளர்களாக பணிநியமனம் வழங்கப்பட்டு பணியாற்றி வரும் கீழ்க்காணும் பணியாளர்களுக்கு அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இளநிலை உதவியாளர் பணிநிலையில் பணிவரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் /பதவி/ பணிபுரியும் அலுவலகம்<br>திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள் | பணியில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு கே.சுப்பிரமணியன், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், ஆவுடையார்கோவில் | 09.03.2019 மு.ப. | 09.03.2019 மு.ப. |
| 2 | எ.சுப்பிரமணியன், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், அன்னவாசல் | 08.03.2019 பி.ப | 08.03.2019 பி.ப. |
| 3 | ஏ.தங்கமணி, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், குன்றாண்டார்கோவில் | 08.03.2019 பி.ப. | 08.03.2019 பி.ப. |
| 4 | பி.நல்லுச்சாமி, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், அன்னவாசல் | 08.03.2019 பி.ப. | 08.03.2019 பி.ப. |

மேற்காணும் தனியர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யப்பட்டுள்ளது. தனியர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவகாலமாக கருதப்படுவதால் நிர்ணயிக்கப்பட்ட இரண்டாண்டு காலத்திற்குள் ஊரக வளர்ச்சித் துறை தேர்வுகள் அனைத்திலும் கண்டிப்பாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.

பெறுநர்
தொடர்புடையவர்கள் (உரிய வழியாக)

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சைதாப்பேட்டை, சென்னை-15.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)/(கி.ஊ), ஆவுடையார்கோவில்/ அன்னவாசல்/ குன்றாண்டார்கோவில். (இரு நகல்கள், சார்வு செய்து சார்வு நகல் அனுப்பிட)

18/12

B-2-41/3128/2020, 18.12.2020

ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம்,
குன்றாண்டார்கோவில்
18.12.2020

ஜிஎஸ்.